செ.வெ.எண்:11 நாள்:05.04.2018

# 2018 -2019 ம் ஆண்டிற்கு சிறப்பு விளையாட்டு விடுதி மாணவ / மாணவியர் சேர்க்கைக்கு விண்ணப்பங்கள் வழங்குதல்

## செய்தி குறிப்பு

தமிழக அரசு விளையாட்டுத் துறையின் கீழ் செயல்பட்டு வரும் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலமாக கல்லூரிகளில் பயிலும் மாணவ/ மாணவியர்களுக்கு விளையாட்டுத் துறையில் சாதனைகள் படைப்பதற்கு ஏற்ப விஞ்ஞானரீதியான பயிற்சி மற்றும் தங்குமிடவசதியுடன் சத்தான உணவுடன் கூடிய சிறப்பு விளையாட்டு விடுதிகள் சென்னையில் செயல்படுத்தப்பட்டுவருகிறது.

**மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி** – சென்னை நேரு விளையாட்டரங்கம் (ம) தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி மாணவியருக்கான விளையாட்டு விடுதி – சென்னை நேரு உள்விளையாட்டரங்கிலும் செயல்பட்டு வருகின்றன.

இதுகுறித்த செய்தியினை கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர், திரு த.அன்பழகன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கையில், சிறப்பு விளையாட்டு விடுதிகளில் உள்ள விளையாட்டுக்களில் பயிற்சி பெற்று சிறந்த விளையாட்டு வீரர்களாக விளங்குவதற்கு 12–ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற/பயிலும் மாணவ/மாணவியர் தகுதியுடையவர் ஆவர். தனிப்போட்டிகளில் விண்ணப்பிப்பவர்கள் மாநில அளவில் குடியரசு / பாரதியார் தின விளையாட்டுப் போட்டிகள் / அங்கீகரிக்கப்பட்ட கழகங்கள் நடத்தும் போட்டிகளில் முதல் மூன்று இடங்களில் வெற்றி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது தமிழ்நாடு அணியில் தேர்வு செய்யப்பட்டு தேசிய அளவில் (SGFI)/கழகங்கள், தேசிய விளையாட்டுப் போட்டிகள் (Federation/National Games)/ (RGKA) நடத்தும் போட்டிகளில் கலந்து கொண்டவர்களும் விண்ணப்பிக்கலாம். குழுப் போட்டிகளில் விண்ணப்பிப்பவர்கள் மாநில அளவில் குடியரசு/ பாரதியார் தின விளையாட்டுப் போட்டிகள் கழகங்கள் நடத்தும் போட்டிகளில் முதல் இரண்டு இடங்களில் வெற்றி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது மாநில அளவில் தேர்வு பெற்று தேசிய அளவில் அங்கீகரிக்கப்பட்ட இந்திய பள்ளிகள் விளையாட்டுக் கூட்டமைப்பு (SGFI)/கழகங்கள், தேசிய விளையாட்டுப் போட்டிகள் (Federation/National Games)/ ஊரக விளையாட்டுப் போட்டிகள் (RGKA) நடத்தும் போட்டிகளில் கலந்து கொண்டவர்களும் விண்ணப்பிக்கலாம். கையுந்துபந்து விளையாட்டில் 185 செ.மீ–க்கு மேல் உயரமுள்ள மாணவ/ மாணவிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும். 2018-2019-ஆம் ஆண்டிற்கான சிறப்பு விளையாட்டு விடுதியில் சேர்வதற்கு கீழ்காணும் விளையாட்டுகளில் மாணவர்/ மாணவியர் சேர்க்கை நடைபெற உள்ளது. **மாணவர்களுக்கான விளையாட்டுக்கள்** 1. தடகளம் 2.கூடைப்பந்து 3. குத்துச்சண்டை 4. கையுந்துபந்து 5.பளுதூக்குதல் 6. வாள்சண்டை, 7.இறகுபந்து, 8 ஹாக்கி ,9. துப்பாக்கி சுடுதல், மாணவிகளுக்கான **விளையாட்டுக்கள்:** 1. தடகளம் 2. குத்துச்சண்டை 3. கையுந்துபந்து 4. கால்பந்து , 5.பளுதூக்குதல், 6.ஜுடோ, விளையாட்டில் சிறந்து விளங்கும் மற்றும் ஆர்வம் கொண்டுள்ள மாணவ / மாணவியர் அதற்கான உரிய படிவங்களை 01.04.2018 முதல் அனைத்து மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன்



அலுவலர்களை அணுகி இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். 2018- 2019 ஆம் வருட சேர்க்கைக்கான விண்ணப்பங்களை www.sdat.tn.gov.in என்ற இணையதள முகவரியில் தெரிந்து கொள்ளலாம். மேலும் விண்ணப்பங்களை அந்தந்த மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நல அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை மேலாளர், சிறப்பு விளையாட்டு விடுதி, ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம், பெரியமேடு, சென்னை– 600 003 என்ற முகவரியில் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ கிடைக்குமாறு அனுப்ப வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க வேண்டிய இறுதி நாள். 18.04.2018. சிறப்பு விளையாட்டு விடுதியில் சேர விரும்பும் மாணவ/ மாணவியர்களுக்கான மாநில அளவிலான தேர்வு 18.04.2018 அன்று சென்னை, ஜவஹர்லால்

நேரு விளையாட்டரங்கத்தில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு தடகளம், குத்துச்சண்டை, கையுந்துபந்து, பளுதாக்குதல் ஆகிய விளையாட்டிற்கும், வாள்சண்டை , துப்பாக்கி சுடுதல் ஆண்களுக்கும், கால்பந்து மற்றும் ஜீடோ பெண்களுக்கும், ஆண்களுக்கான கூடைப்பந்து **சென்னை நேரு உள்விளையாட்டரங்கத்திலும்,** ஆண்களுக்கான இறகுப்பந்து **நேருப் பூங்கா விளையாட்டரங்கத்திலும்,** ஆண்களுக்கான வளைகோல்பந்து மேயர் ராதாகிருஷ்ணன் உறாக்கி விளையாட்டு அரங்கத்திலும் தேர்வுப் போட்டி நடைபெறும். தொடர்புக்கு கரூர் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நல அலுவலக தொலைபேசி எண். **9444753260** என்ற எண்ணில் தொடர்பு கொள்ளுமாறும், கலந்து கொள்ளும் மாணவ/மாணவிகள் 8.00 மணிக்குள் சம்பந்தப்பட்ட மையத்தில் ஆஜராகி பயன்பெறுமாறு கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு த.அன்பழகன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கின்றார்.

செய்தி வெளியீடு. செய்தி மக்கள் தெடர்பு அலுவலர், கரூர்